ஓம் தத் ஸத்.

ஏகமேவாத்விதீயம்.

தத்துவபோதினி.

பு. ௫.] சென்னைப்பட்டணம் ௧௮௯௭௵ ஏப்ரல்மீ ௧௫௨. [இல. ௧௨.

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள் துதி.

உயர்வறவுயர்நல முடையவனெவனவன்,
மயர்வறமதிநல மருளினனெவனவன்,
அயர்வறுமமரர்கள் அதிபதியெவனவன்,
துயரறுசுடரடி தொழுதெழன்மனனே.
(நம்மாழ்வார்.)

நித்தியமாய்நிர்மலமாய்நிட்களமாய் நிராமயமாய்நிறைவாய்நீங்காச்,
சுத்தமுமாய்த்தூரமுமாய்ச்சமீபமுமாய்த் துரிய நிறைசுடராயெல்லாம்,
வைத்திருந்ததாரகமாயானந்தமயமாகி மனவாக்கெட்டாச்,
சித்துருவாய்நின்றவொன்றைச் சுகாரம்பப்பெருவெளியைச்சிந்தைசெய்வாம்.

பொய்யினேன்புலையினேன்கொலையினேனின்னருள் புலப்படவறிந்துநிலையாப்,
புன்மையேன்கல்லாததன்மையேனன்மைபோற் பொருளலாப்பொருளைநாடும்,
வெய்யனேன்வெகுளியேன்வெறியனேன்சிறியனேன் வினையினேனென்றெண்ணிநீ,
விட்டுவிடநினைவையேற்றட்டழிவதல்லாது வேறுகதியேதுபுகலாய்,
துய்யனேமெய்யனேயுயிரினுக்குயிரான துணைவனேயிணையொன்றிலாத்,
துரியனேதுரியமுங்காணுவதீதனே சுருதிமுடிமீதிருந்த,
வையனேயப்பனேயெனுமறிஞரறிவைவிட் டகலாதகருணைவடிவே,
யண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி யானந்தமானபரமே.
(தாயுமானவர்.)

தத்துவபோதினி.

சோதரர்களே !

இரண்டொருவருஷங்களுக்குமுன்வேத சமாஜகண்டனமென்று பெயரிட்டுஒருகும்ப கோணபண்டிதர் எழுதியகிரந்தத்திற்கு சகாயமாக பிரகிருதத்தில் ஒருகும்பகோண சபையார் வெளிப்பட்டு "தர்மசபை" யென்கிற பெயரை யிட்டுக்கொண்டு எங்களை பலவிசைவாதிற்கு இழுப்பது அனைவர்க்கும் தெரிந்திருக்குமே. கேவலம் தத்துவத்துக்கு முயலும் நாங்கள் வெற்றியை ஒருபிரயோசனமாகக்கொள்ளவில்லையாகையாலும், எந்தநிமித்தத்தினாலாவதுநம்மவரைமனம்நோவச்செய்வது எங்களுக்கு இனிக்கவில்லையாகையாலும், பிஷ்டபேஷணம் அநாவசியகமாகையாலும், சர்விதசர்வணம் விரசமாகையாலும், ஒருவரோசபையாராய் ஏற்பட்ட இவருடைய அக்ஷேபங்களுக்கு விசேஷமாய் விடையுரைக்காமல் இருந்ததையே பலர் எங்களுடைய தௌர்ப்பல்யத்போதகமாககிரஹித்துநகைக்கதொடங்கினபடியால் அவ்விஷயமாய்சிலமொழிகளைக்கூறுகிறோம்.

விவேகிபாவனை செய்பவரின் தந்திரங்களுள கேவலம் ஆக்ஷேபம் மாத்திரம் செய்வது ஒன்றென "லார்ட்பேகன்" உரைத்தஉண்மை இச்சபையாருடைய வினாக்களைப்படிப் போருக்குநிதர்சனமாகாமல் போகமாட்டாது. ஏனெனில் அவர்கள் பிரச்னைகளைக் கேட்பதே யுத்தேசமென்று கொண்டார்களேயன்றி அவற்றில் அனைத்திற்கும் நாங்களேவிடையுரைக்க வேண்டியதோ, பலவற்றிற்கு விடையுரைக்க வேண்டியபளுதங்கள்மீது பொருந்தவில்லையோசிலவற்றிற்கு அவர்கள் கக்ஷியைச்சேர்ந்த அயலாருரைக்கவேண்டியதல்லவோ என்பதையுங்கூடயோசிக்கவில்லை. புராண சாமான்னியமும் அவர்கட்கு பிரமாணமா என்று நாங்கள் கேட்டகேள்வியைத்தானே எங்கள்மீதுதொடுத்திருக்கிறார். வேதசமாஜகண்டன மெழுதியவர் "அர்ச்சையே பிரமம் பிரமமே அர்ச்சை" என்பதற்கு என்ன ஆதாரமென்று எங்களைக்கேட்கிறார். அன்றியும் உபயத்திர சம்பிரதிபன்னமான விஷயங்களில் வேறாதுவுரைக்கும்படி யெங்களைபாதிக்கிறார்.

உலகத்திலுள்ளஒவ்வொருவரும் தனித்தனியாய் திரும்பி த்திரும்பி கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் பதி லெழுதிக்கொண்டிருக்க எங்களுக்கவகாசமிருக்குமென்று எதிர்பார்ப்பது விவேகத்துக்கடுக்குமோ? எங்கள்புத்திக்கும் சக்திக்கும் அவகாசத்திற்கும் இயைந்தவரை நாங்கள் எழுதுவதை ப்பார்ப்பவர்கட்கு ஐயந்திரிபின்றி தெளிவுமாகில் அவர்கள் எங்கள்கொள்கையைஆமோதிக்கட்டுமென்பது எங்கள் கோரிக்கையேயன்றி வம்புக்குவாதாடுவோருடன் விண்பொழுதுபோக்கவல்ல. சமாதானம் வந்தாலும் ஒப்புகொள்கிறதில்லையென்று பிரதிக்கினை செய்துகொண்டவர்களுக்கு பலமுறையுரைத்தும் பிரயோஜனமில்லையாகையாலும் ஆந்தரியமாய்உண்மையைஅறியவேண்டுமென்கிறஅபிப்பிராயமுடையவர்கட்கு எங்கள் முதல் விண்ணப்பமே திருப்தியைக்கொடுக்குமாகையாலும் வீண்கண்ட சோஷணையில்பிரயோஜனமில்லை. நமதுதர்மசபையார் அவ்வாறு பிரதிக்கினை செய்து கொண்டவராகவேயிருக்கவேண்டும். ஏனெனில் எங்கள் விண்ணப்பத்தில் நிஸ்ஸந்தேகமாய் சமாதானம் கிடைத்திருக்கிற விஷயங்களைக் கூட மறுபடியாக்ஷேபிக்கின்ற மையால் அவ்விதமாயாவது கொள்ளவேண்டியிருக்கிறது. அல்லது கையிலுள்ள புத்தகத்தைபடிக்காமல் மறுபடியெங்களைக் கேட்பதினால் "உதட்டில் வாழைப்பழம் உள்ளே தள்ளுவாருண்டோ" என்கிறபழமொழிக்கு அவர்கள். லக்ஷியமாகிறார்கள். சாதாரணமாய் ஒருதடவை தீரவிசாரித்து விட்டவிஷயத்தில் ஆவசியகமின்றி மறுபடிபிரவிர்த்திக்கவேண்டியதில்லையாகிலும்இச்சபையார் கேள்விகளுககு விடையுரைக்க நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறபடியால் இனி இதைக்குறித்து விசேஷமாய் பிரஸ்தாபிக்கமனமில்லா விடிலும் இவர்பொருட்டு மாத்திரம் அதைமறுபடியிந்ததடவை சாங்கமாய் சர்ச்சிக்க நிச்சயித்தோம். ஆகிலு

ம், நாம் ஒருவருடன்வாதிக்கத்தொடங்குமுன் அவருடைய சுவரூபமும், கொள்கையும், பிரமாணங்களும், இன்னவையென்று அறிந்து கொள்ளாமல் பிரவர்த்திப்பது நிஷ்பலமாகையால் முதலில் அவ்விஷயங்களில் எங்கள்சந்தேகத்தைநிவர்த்தித்துக்கொண்டு பிறகுசர்ச்சிக்கத்தொடங்குவது உத்தமமாக இருக்கும். எங்கள் கொள்கைமுதலியவற்றைக் குறித்து நாங்கள் ஒருகிரந்தமெழுதி விட்டபடியால் இவ்விஷயங்களில் அச்சபையாருக்கு ஒருஸ்தூலக்கியானமாவது உண்டாயிருக்கும். அன்றியும் எங்கள் கிரந்தம் வேதசமாஜகண்டனகாரருக்கு விடையாயெழுதப்பட்டதேயன்றி உமதன்புள்ளசபையாரைவாதுக்கிழுக்கவல்ல. எங்களைஇப்பொழுது வாதுக்கிழுக்கின்ற அச்சபையார் தங்கள் சுவரூபத்தை முன்பு விளக்கிவிட்டு பிறகுஎங்களைக் கேட்கவேண்டியது மரியாதைக்கடுத்த காரியமாகும். ஆகையால் நாங்கள் வெகுவினயமாய்கேட்கப்புகின்ற சுவல்பவினுக்கள்யாவெனில்,

௧-வது. தர்மசபையார் நாஸ்திகரர் ? ஆஸ்திகரா ! ஆஸ்திகராகில்உலகத்திலுள்ள பலஆஸ்திகமதங்களில் எதைச்சேர்ந்தவர்கள்.

௨-வது. அவர்களுக்கு பிரமாணங்களெவை ? இந்தபிரமாணங்களெல்லாம்சமகௌரவமுள்ளவைகளா ? அவற்றுள்தாரதம்மியமுண்டா ? உண்டெனில் என்னவேறது என்பவைகளே.

எங்களை யேறக்குறைய நூறுவினுக்கள் கேட்ட இந்தசபையார் இரண்டுவினுக்களுக்கு விடையுரைக்க அஞ்சுவார்களென்று நாங்கள்நினைக்கவில்லை. இவ்விரண்டுவினுக்களுக்கும் சரியான விடைகிடைத்தவுடனே அவ்விடைகளினுலேயே அவர்கள்வினுக்களுக்கெல்லாம் சமாதானம் கிடைக்குமென்று காரியாம்சத்தில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

மநுநூல்.

௩ - ம் - அத்தியாயம்.

(௮௧.) (கிரஹஸ்தன் செய்யத்தக்க தர்மமாவது.) கிரகஸ்தனுனவன் அத்தியயனம் செய்வதால் ரிஷிகளையும், ஹோமத்தால்தேவர்களையும், சிரார்த்தத்தால்பிதிருக்களையும், அன்னத்தால் மனிதரையும், பலிகொடுப்பதால் பூதங்களையும், சாஸ்திரத்தின் முறைப்படியே பூஜிக்கத்தக்கவனுகின்ருன்.

(௮௨.) கிரஹஸ்தனுனவன் தினந்தோறும் அன்னம், ஜலம், பால், கிழங்கு பழங்கள், இவைகளால் சிரார்த்தத்தைபிதிருக்களின் திருப்தியின்பொருட்டு செய்யத்தக்கவனுகின்ருன்.

(௮௩.) (கிரகஸ்தனுனவன்) பஞ்சயக்கியத்தில் ஒன்ருகிய பிதிருயக்கியத்தில் ஒரு பிராம்மணனை யாயினும் போஜனம் செய்விக்கவேண்டும்; மற்றநான்குவைசுவதேவம்முதலியதில் ஒருவனுக்கும்போஜனம்செய்விக்கத்தகாதவனுகின்ருன்.

(௮௪.) தினந்தோறும் பிராம்மணனுனவன் மேலுரைத்த (பிதிரு) யக்கியம். செய்தபிறகு வைசுவதேவத்தின் பொருட்டு கிரஹஸ்தாக்னியில் கீழ்ச்சொல்லப்படும் தேவர்களின் பொருட்டு ஹோமம் செய்யத்தக்கவனுகின்ருன்.

(௮௫.) (முதலில்) அக்கினிதேவனுக்கும் (பின்பு) ஸோமதேவனைக்கும் (பின்பு) எல்லாவிசுவேதேவர்களுக்கும் (பின்புதேவவைத்தியராகிய) தன்வந்தரிக்கும்,

(௮௬.) (பின்பு சுக்லபக்ஷத்தின் (பகலுக்கு தேவதையாகிய) குஹூவுக்கும்) கிருஷ்ணபக்ஷத்தின் பகலுக்கு தேவதையாகிய) அனுமதியின்பொருட்டும், தியாவாபிரதிவி (ஆகாயம்பூமி) யின்பொருட்டும் (பின்பு) ஸ்விஷ்டகிருத்தினபொருட்டும் (யக்கியதேவதையின்பெருட்டும்.)

(௮௭.) இவ்வாறுநன்ருய்ஹவிஸ்ஸை ஹோமம்செய்து, நாலுதிக்குகளிலும் பிரதிக்ஷிணம்செய்து, இந்திரன், வருணன், சந்திரன், முதலியவர்களின்பொருட்டும், அவர்களை அடுத்தவர்களின் பொருட்டும் பலியைகொடுக்க வேண்டும்.

(௮௮) "மருத்துக்களின்பொருட்டு

வந்தனம்" என்று வீட்டின் வாசப்படிபண்டையில் பலியை கொடுக்கவேண்டியது. "வருணன் பொருட்டு வந்தனம் செய்கிறேன்" என்று சொல்லி ஜலத்தில் பலியைகொடுக்கவேண்டியது. "வனஸ்பதி (பெரியவிருக்ஷத்தின்தெய்வம்) யின்பொருட்டுவந்தனம்செய்கின்றேன்" என்றுசொல்லி யுலக்கைஉரல்களின்மேல பலியை கொடுக்க வேண்டியது.

(அசு) வடகிழக்கில் ஸ்ரீயின்பொருட்டும், தென்கிழக்கில்பத்திரகாளியின்பொருட்டும் வீட்டின் மத்தியத்தில் பிரமன் பொருட்டும் மற்ற தேவர்களின் பொருட்டும் பலிகொடுக்கவேண்டியது.

(கூo.) விசுவேதேவர்களின் பொருட்டும், மற்றபகலில் சஞ்சரிக்கும் பூதங்களுக்கும், இரவில்சஞ்சரிக்கும் பூதங்களின் பொருட்டும், ஆகாயத்தில்பலிகொடுக்கவேண்டியது.

உபந்நியாஸம்.

அவுஷததானம்.

அன்பர்களே! இதுவரை வித்தியாதானம், அன்னதானம், இவ்விரண்டையும் குறித்து ஒருவாறு பிரஸ்தாபித்தோமல்லவா! இனிகவுரவத்தில் இவ்விரண்டிற்கும்பிந்தியதாகிய அவுஷதானத்தைக்குறித்துச்சில மொழிகளைக்கூறவேண்டியதாகிறது. இந்தமூவகைத்தானங்களுக்குள் இன்னதுசிரோஷ்டமானது இன்னதுநிகிருஷ்டமானது என்கிற விஷயத்தில்பலவிதஅபிப்பிராயபேதங்களிருக்குமாகிலும், தெளிந்தஞானமுடையவர்களில்பெரும் பான்மையரும்வித்தியாதானத்தைர்சவசிரோஷ்டமானதாயும், அன்னதானத்தையிவ்விரண்டிற்கும்தாழ்ந்ததாயும்கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை. அநேகதிருஷ்டாந்தங்களால் இவற்றின்தாரதம்மியத்தைநிரூபித்துக் காட்டக்கூடுமாகிலும், பிரகிருதத்திற்கு ஒருநிதர்சனமே போதுமென்று நினைக்கிறேன். இம்மையிலும் மறுமையிலும், தத்காலத்தில்மாத்திரமன்றி எக்காலத்திலும் சவுக்கியம், கௌரவம், கீர்த்திமுதலியநிலைத்தபயன்களையளிக்கத்தக்கதுவித்தியாதானமொன்றேயாகையாலும்; அதைக்கொடுப்போர் பெறுவோர் இருவருக்கும் லாகவமில்லையாகையாலும்; அது சர்வஜனங்களுக்கும் அத்தியாவசியகமானதாகையாலும்; வித்தியாதானமே சர்வ சிரோஷ்டமானதாகும். நோயாளிகளுக்குமாத்திரமேஅவுஷதம்ஆவசியகமாகையாலும், உலகத்தில் நோயாளிகள்வெகு சிலரேயாகையாலும், அவுஷததானம் இம்மூன்றனுள்கடையதாகும். அன்னதானம் இவவிரண்டிற்கும் மத்தியஸ்தானத்திலிருக்கவேண்டுமென்பது, மேற்சொல்லியஹேதுக்களாலேவிளங்கும்.

அவுஷததானத்துக்குச்சம்மந்தமாக, அதற்கு விஷயங்களையும் யோசிக்க வேண்டியதாவசியகமாகிறது. அன்னதானத்துக்கு இஷ்டமுள்ளவரெல்லாம் அதிகாரியாகக் கூடும். அவுஷததானத்துக்கப்படியல்ல. இஷ்டமாத்திரமேயன்றி சக்தியுமிருக்கவேண்டும். அன்னதானம் செய்யமாத்திரம் சக்திவேண்டியதில்லையாவென்றாலோ. இவ்விரண்டிலும்ஆவசியகமாயுள்ள சக்திகளுக்குள்விசேஷதாரதம்மியமுண்டு. மனிதரில் ஒவ்வொருவருக்கும் கடவுள் மனமிரங்கி உணவளிக்கின்றமையால்இஷ்டமுள்ளவர் அதில்ஒருகபளத்தை அயலார்க் களிக்க சக்தியில்லாமற் போகமாட்டாது. அப்படிசக்தியின்றி கொடுத்தாலும், அதனால் அதைப்பெறுவோனுக்கு யாதொரு தீமையும் விளையமாட்டாது. அவுஷதவிஷயத்தில் ஆவசியகமானது விசேஷமான சக்தியாகும். உலகத்தில்வைத்தியம் தெரியாதவரும், ராகம்தெரியாதவரும் வெகு அபூர்வமென்றுவழங்கப்படுகிறதல்லவா! ஒருகும்பலில் ஒருவன் தனக்குத்தலைவலிப்பதாய் பிரஸ்தாபிப்பானாகில் அதற்குசாம்பிராணிபற்றுபோடுவது நலமென் றொருவனும், வேது பிடிக்கவேண்டுமென்று மற்றொருவனும், கலுகம்போடவேண்டு மென்று பின்னொருவனும், இவ்வாறே மற்றுமுள்ள ஒவ்வொருவனுமொவ்வொரு சிகிச்சையைக் கூறுவாரென்பது லோகபிரசித்தம், பஹிச்சின்னமான ஒவ்வொருநோயும் அந்தர்கதமான பலஹேதுக்களில் ஒவ்வொன்றையும் பற்றியதாயிருக்கலா மாகையால், பித்தத்தலைவலிக்குச்செய்யும் சிகிச்சையை, சைத்தியத் தலைவலிக்குச்செய்தாலும், சைத்தியத்தலை வலிக்குச்செய்யும்வைத்தியத்தை உஷ்ணத்தலைவலிக்குச்செய்தாலும் பிரயோஜன மில்லாமற்போவது மாத்திரமேயன்றி, சிலசமயங்களில் பிரமாதம் வந்துறுமென்பது ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தமாயிருக்கும். ரோகசுவரூபம் நன்றாய்த்தெரிந்திருந்தும், அவுஷதசுவரூபம் தெரியாவிடினும் பிரமாதம் விளையும். உறக்கமற்றவனுக்கு அபினிகொடுக்கவேண்டுமென்று சாமானியமாய்க் கேள்விப்பட்டவன், ஒரோதடவையில், ஐந்துபலம் அபினியைக் கொடுப்பானாகில்மரணம் நேரிடு

மென்பதில் சந்தேகமோ! ஆகையால் வியாதிகளின் சுவரூபமும், அவற்றிற்குறியசிகிச்சாஸ்வரூபமும், மருந்துகளின் குணங்களும் நன்றாய்த் தெரிந்தவர்களே அவுஷததானம் செய்வதற்கு அதிகாரியாவார்கள். இவ்வளவு ஞானமே போதுமானதாகமாட்டாது. நோயாளிகளுடைய தேகக்கூறும் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். ஒருபெரியகிராமத்திலுள்ள ஒவ்வொருவைத்தியனுக்கும் அனைவருடைய தேகக்கூறும் தெரிந்திருப்பதசாத்தியம். ஆகையால் பலமான வியாதிகளுக்கு மிகவும் சமார்த்தனாகிய வைத்தியனுடைய சகாயம் அவசியமாகிலும், சாதாரணமான ரோகங்களுக்கு அப்படியல்ல. சகலமானபேர்களுக்கும், முக்கியமாய் ஒவ்வொருபெண்ணுக்கும் வைத்தியத்தில் ஸ்தூலமான ஞானமிருக்குமாகில, அவரவருடைய குழந்தைகளிடத்தில்எதாவதுநோய்உண்டானவுடனே அதைப் பிரமாதமாக ஒட்டாமல் தகுந்த சிகிச்சையால் பரிகரிப்பதுமாத்திரமேயல்லாமல், வியாதியே அண்டாமலிருக்கும்படிக்குஉணவு,உடுப்பு,பாரிசுத்தியம்முதலியவற்றைஅமைத்துவைப்பார்களென்பதற்கு இங்குலீஷாரிலும் விபவத்தில்சிறந்தகுடும்பங்களிலுள்ளஸ்திரீகளிலும்பலரை திருஷ்டாந்தமாய்க்கொள்வதில் விசேஷ பயனிருக்கமாட்டாது. அத்தியுன்னததசையிலாவது அதிந்சதசையிலாவது இலலாமல்மத்தியதசையிலுள்ளவர்களே சிறந்ததிருஷ்டாந்தமாவார்கள். அதிகாரிவிஷயமாய் வளர்த்தியுரைக்கப்பிரகிருதத்தில் அவகாசமில்லை யாகையால், இனிபாத்திர சுவரூபத்தைக்குறித்துச் சிலமொழிகளை யுரைக்கிறேன்.

மற்றதானங்களிற்போலவே, நோயாளிகளெல்லாம் அவுஷததானத்துக்குப் பாத்திரராவாரென்று முதலெடுப்பில் தோன்றுவது சகஜம். அவர்களனைவரும் அவுஷதத்துக்குப் பாத்திரரேயாகிலும், அவுஷத தானத்துக்குப்பாத்திரராகமாட்டார்கள். வியாதியால் பீடிக்கப்பட்டு, அதற்குத்தகுந்த சிகிச்சையை சம்பாதித்துக்கொள்ள உபபத்தியும், அவகாசமும், இல்லாதவர்களே உண்மையான பாத்திரமாவார்கள். தங்களுக்கு மாத்திரமேயன்றி அயலாருக்கும் வைத்தியசகாயத்தை அமைத்துவைக்கத் திறமுடைய செல்வவான்களுக்கும் நோயுள்ளபோது அவுஷதம் ஆவசியகமாகிலும், அவர்கள் அவுஷததானத்துக்குபாத்திர மாகமாட்டார்கள். பாத்திரதாரதம்மியங்களைக்குறித்து இதரதானங்கள் விஷயமாயுரைத்ததைக் கொண்டே இவ்விஷயத்திலும் தெளிவுபெறக்கூடுமாகையால், இனியிதில் விசேஷமாய்க்காலத்தைப் போக்குவதனாவசியகமாகும். கடைசியாக பணக்காரர்தங்கள் திரவியசகாயத்தால் அவுஷதத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாமென்றும்; ஏழைகளுக்குமாத்திரமே அதைதானம் செய்யவேண்டுமென்றும் குறிப்பிடுவதே போதுமானதாயிருக்கிறது.

இனிஇந்ததானத்தைச்செய்யவேண்டியமார்க்கத்தைக்குறித்துச்சிறிதுவிசாரிப்போம். உலகத்தில்அனைவருக்கும் வைத்தியம்செய்யசக்தியிராது. அந்தசக்தியைப்பெற்ற அனைவர்க்கும் அவரவருடைய ஜீவனோபாயங்களில்முயலவேண்டிய ஆவசியகமிருக்குமாகையால் விசேஷமாய்ச் சிகிச்சைசெய்ய அவர்களுக்குஅவகாசம் இராது. இஷ்டம், சக்தி, அவகாசம் இம்மூன்றுமிருந்தும் அவர்களுடைய பிரவிர்த்தி யுசிதமாயிராது. ஏனென்றால் ஸ்போடகம், வாந்திபேதி, முதலியதொத்துவியாதிவிஷயங்களில் பிரவர்த்திப்பது, பலவிசைவிபத்கரமாகவிருக்கும். அல்லாமலும் விசேஷபடிப்பும்,பழக்கமும், சமமாய்அமைந்திருந்தாலல்லதுஇஷ்டமாவது, சக்தியாவது அவகாசமாவதுகாரியாகாரியாகமாட்டாது. ஆகையால் சாதாரணமான வியாதிக்குசிகிச்சைசெய்ய ஒவ்வொரு பெண்பிள்ளைக்கும் சக்தியிருக்கவேண்டுமாகிலும், பிரபலமான வியாதிகள் விஷயத்தில் வைத்தியத்தொழில் முயன்று தேர்ந்தவர்களே பிரவர்த்திக்கவேண்டியதாவசியகமாகிறது. ஆகையால்பெண்களுக்குசகலவித ஆவசியகமானவும் உபயுக்தமானவும் ஞானமளிக்கத்தக்க பாடகசாலைகளும், நோயாளிகளுக்குச் சுகமளிக்கத்தக்க வைத்தியசாலைகளும் அத்தியாவசியகமாகும்.

முடிவாக அன்னதானத்துக்குச் சிறந்தவிடமெதுவென்றறியப்புகுங்கால், கல்விநிமித்தம்முயலும் ஆதரவற்றசிறுவர்களும்வைத்தியசாலைகளிலடைந்திருக்கும் நோயாளிகளுமேயென்று விளங்கும்.

பிராணனை தரிக்கச்செய்வது அன்னமும், இம்மைச் சுகத்தைக்கொடுப்பது வைத்தியமும், இம்மைமறுமை இவ்விரண்டுசுகங்களையும் அளிப்பது வித்தையுமாகையால், இம்மூன்றும் சகலவித தானங்களிலும் சிறந்தவையாய் மதிக்கப்படுகின்றன. நம்முடைய நாட்டில்மாத்திரம் அன்னதாதாவுக்கு மிகுந்தசிறப்பும், உபாத்தியாயர் விஷயத்திலும், வைத்தியர்விஷயத்திலும் லாகவபுத்தியுமஉண்டாயிருப்பது அனைவர்க்குந் தெரிந்தவிஷயம். நாகரீகமுள்ள சகலநாடுகளிலும் மிகவும் கவுரவமானவையாய் மதிக்கப்படுகிற வைத்தியத்தொழிலும், உபாத்தியாயத்தொழிலும் நம்முடையதேசத்தில்மாததிரம் நீச

த்தொழில்களாய்எண்ணப்படுவது, தெரியாமையைப்பற்றிவந்த அநாதிபழக்கத்தின்வாசனையேயன்றி வேறல்ல. யாதொருபிரதிப்பிரயோஜனத்தையும் அபேக்ஷிக்காமல். கேவலம்தர்மசிந்தையுடன் நிஸ்பிருஹராய் இந்த தானங்களைச்செய்பவர் சர்வசிரோஷ்டரோயாகிலும், அவ்வாறுசெய்ய சக்தியில்லாமையினால் சம்பளததுக்கு இத்தொழில்களைச்செய்பவரும் இகழ்ச்சிக்குப் பாத்திரராக மாட்டார். சுவல்பதாத்காலிகப் பிரயோஜனத்தையபேக்ஷித்து, பாரமார்திகசிந்தையுடன் இத்தொழில்களைச் செய்பவரும்சிலாகைக்கேபாத்திரராவார். உதாரநிமித்தம் பிரதிப்பிரயோஜனத்தை யபேக்ஷித்தபோதிலும், வஞ்சனையும் பக்ஷபாதமுமின்றி யுதவுகிறவர்களுக்கு இம்மைமறுமைச சுகங்களும் கீர்த்தியுமுண்டாகும்.

கடைசியாக உலகத்தில் பிச்சையெடுப்பதைக்காட்டிலும் நீசத்தொழில் ஒன்றுமில்லாவிடினும், நமதுதேசத்தில் இதில்லாகவம்தோன்றுவது நம்முடையதவுர்ப்பாக்கியத்தின்பயனாகவிருக்கிறது. இதைக்குறித்துத்தனியாயொரு உபந்நியாசம் செய்தாலன்றிமுடியாதாகையால், இப்போதிதை விசேஷமாய் வளர்த்தாமலொழிக்கின்றேன்.

இதுவரை விசாரித்த மூவகைதானங்களே சர்வசிரோஷ்டமானவையாகிலும், பாத்திரமறிந்துசெய்யும்வஸ்திரதானமும் ஒருவாறுசிறக்கும். இதுவரையில் செய்த பாத்திரவிசாரரீதியினாலேயே, மானத்தைக் காத்துக்கொள்ளஆவசியகமான சாணதுணியை சுவயமாய் சம்பாதித்துக்கொள்ள சக்தியும் அவகாசமுமற்றவர்களே வஸ்திரதானத்துக்குசத்பாத்திரராவாரொன்பது ஸ்பஷ்டமாய் விளங்குமாதலால், இதைக்குறிதது விஸ்தரித்துரைக்கவேண்டிய ஆவசியகமில்லை.

பாதிவிருத்தியத்தைச்குறித்து கூறுங்கால் கன்னிகாதான பிரஸ்தாப மாவசியகமாகையாலும்,ஒரோவிஷயத்தை யிரண்டுவிசையுரைப்பது அனவசியகமாகையாலும், அதைக்குறித்துப் பிரகிருதத்தில் விசாரிக்கவேண்டியதில்லை,

மற்ற சில்லரைதானங்க ளெல்லாம் கேவலம் சாங்கேதிகமானவை யாகையாலும், அவற்றைச் செய்வதிலும் ஒருபயனில்லை, ஒழிப்பதிலும் தீமையில்லையாகிலும், இதுவரை தானவிஷயமாய்ச் செய்தவிசாரத்தாலே அவற்றின் சுவரூபத்தை யெளிதிலறிந்து கொள்ளக் கூடுமாகையாலும், அவற்றைக் குறித்தப்பொழுது போக்குவது அனவசியக மாகும்.

கருணையின் பிரவிர்த்திக்கு மார்க்கங்களைக்கூறத் தொடங்கியல்லவா தானங்களின் பிரஸ்தாபமுண்டாயிற்று. செய்வதில்மாத்திரமேயன்றி பொறுப்பதிலும் கருணைக்கிடமுண்டாகையால், வருகிற உபனியாசத்தில அதைக்குறித்துச் சிலமொழிகளைக்கூறி கருணைவிசாரத்தை முடிப்போம்.

பட்டுக்கோட்டை பிரமசபை.

தத்துவபோதினி பத்திராதிபர்களவாகட்கு ஐயா.

மார்ச்சுமீ ௯ - சனிக்கிழமைதினம் பட்டுக்கோட்டைப் பிரமசபையில் அச்சபையைச்சேர்ந்த வொருவரால் செய்யப்பட்ட ஓருபநியாசம் இத்துடனனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குத்தங்கள் சிறப்புப்பொருந்திய பத்திரிகையினோர் கோணத்தைத்தருவீர்களெனவந்தனத்துடன்பிரார்த்திக்கிறேன்.

சோதரர்களே !

இப்பொழுதுநானெடுத்துக்கூறநிச்சயித்திருக்கும்விஷயம் மிகவும்பெரிதானதாயிருந்த போதிலும் அதைப்பற்றிநான் விவரிக்கிற சிலமதங்களைச்சொற்களுக்கு மனமுவந்துசெவிகொடுப்பீர்களென வணக்கத்துடன் பிரார்த்திக்கிறேன்.

இவ்வுலகத்தில் நாமுதித்தநாள்முதலிதுவரையில் நாமடைந்திருக்கும் விஷயானுபவங்களை நினைத்துப்பார்க்கசர்வமும் ஒருபொருளையொட்டி மற்றொன்றைகிரஹித்திருக்கிறதாய் விளங்குகின்றதேயல்லாமல் வேறில்லை. எப்படியெனில் குடத்தைக்கண்டு குயவனையூகிப்பதுபோல, ஜகமாய் விளங்கும் பலசராசர பேதவடிவங்களைக்கண்ணேச்சமிட அவைகளைப்படைத்தளிக்கும் சர்வசக்த நித்தியபொருளொன்றிருக்கவேணுமென்றுணர்வது இயல்பேயல்லவா. அவருக்கு எவ்விதரூபமுமில்லை யென்றும், அவர் அனுமானப்பிரமாணத்தினால் தானறியத்தக்கவரொன்றும், வேதம்முறையிடுகின்றது. அதில்சிலவற்றை இவ்விடத்தி லுதஹரிக்கிறேன்.

"అదృష్టమవ్యవహార్య, మగ్రాహ్యమలక్షణ, మ
చింత్య మవ్యపదేశ్య, మేకాత్మ, పత్యయసారం,
ప్రపంచోప శమం, శాంతం, శివమద్వైతం"

அவர் அகோசரமானவர் கர்மேந்திரியங்களால் கிரஹிக்கப்படாதவர், வியவஹாரங்களுக்குட்படாதவர் மங்கலசுவரூபி அத்துவைதர். மேலும் அவரிருப்புக்கு ஆத்துமபிரத்தியயந்தான் பிரமாணம்" என்றும். "నసందృశే తిష్ఠతి రూపమస్య, నచక్షుషా పశ్యతి కశ్చనైనం, హృదా మనీషా మనసాభిక్లృప్తః"

"அவரது சுவரூபம் தரிசனவிஷயங்களுக்குபட்டதல்ல அவரைகண்கள்பார்க்கஇயலாது; அவர் சம்சயரஹிதமானபுத்தியின் மூலமாய் கிரஹிக்கப்படுகிறார்" என்றும். "నతత్రచక్షుర్గచ్ఛతి, నవాగ్గచ్ఛతి, నోమనో. నవిద్మోనవిజానీమోయథైత దనుశిష్యా దన్యదేవ, తద్విదితాదథో అవిదితాదధి, ఇతి శుశ్రుమ పూర్వేషాం, యేనస్తద్వ్యాచచక్షిరే"

"கண்ணாவதுவாக்காவது அவரைஎட்டுகிறதில்லை அவரைநாம் அறியோம், ஆதலால் அவர்சுவரூபத்தைப்பற்றி அன்னியருக்குபதேசிக்கும் வகையறியோம். தெரிந்தவஸ்துகளுக்கும் தெரியாதவற்றிற்கும் அன்னியமாயிருக்கிறார். பிரமத்தைப்பற்றிவிவரித்தமுன்னோரிடத்தினின்றுஇதைக்கேள்விப்பட்டோம்" என்றும் இன்னும் பலவாறாயும் சுருதிதெளிவாய்விளக்குகின்றது. இதைநாம் சலனமிலாமனதுடன் நினைத்துப்பார்க்கில், நம்முடையமுன்னோர்களும் தேர்ச்சியுள்ள அறிவைக்கொண்டே பிரமநிர்த்தாரஞ் செய்திருக்கிறார்களென்று நிஸ்ஸந்தேஹமாய்நமக்குவிளங்கும். இவ்வண்ணமறிந்தெடுத்த தர்மம் தான்நம்மிறைவனால்நமக்குகிருபைசெய்யப்பட்ட இயல்பானசமயமென்று முற்று மூணாந்ததத்துவஞானிகளால் சொல்லப்பட்டிருக்கின்றது,

இதுவேசத்தியமாகில் நமக்குள் பலசங்கேத அபிமதக்கிரந்தங்களிலும், புராணங்களிலும். அசிந்திய, அவ்வியக்த, அசரீர, அருள்தேவனுக்கு நியாயப்பிரமாணங்களுக் கொவ்வாத அப்பிராகிருதஅல்லது பிராகிருதசரீரம் நிறமுதலியவைகளுண்டென்று திருசியமானது போல் பூரித்து எழுதியிருக்கும் விஷயங்களையும், அவ்வபிமதங்களை நம்பினவர்கள் வெளியிடும்நியாயங்களைவும், நாம்மெய்யென்றுநம்பநம்மனமிடந்தராது. எப்படியெனில் தன்னைபுந்தனக்காதாரத்தலைவனை அறிந்து என்றுகைவல்லியநவநீதத்திலும், இன்னும் பெரியோர்வாக்கிலும், சொல்லப்பட்டிருக்கிறபடி தானாகிய ஆத்துமத்தின்லக்ஷணமித்தன்மையதானதென்று முன்னதாயுணராவிடில் தனக்காதாரமான பிரமத்தின்லக்ஷணத்தைப்பற்றி அறிந்துக்கொள்வது அருமையே. ஆகலால்ஆத்துமத்தின்சுவரூபத்தைப்பற்றி சற்று விசாரிப்போம். ஆத்துமதத்துவங்களில் முக்கியமானமனம், அகங்காரம், ஆகிய இவற்றுள், தானாகியஆத்துமம், எதுவென்றுஆராய்ச்சிசெய்யப்புகின், இதுமனம். இதுபுத்தி, இதுசித்தம், இதுஅகங்காரமென்று அவற்றைஅறிந்த ஓர் அறிவு அவைகளுக்கு அன்னியமாய் விளங்குகின்றதல்லவா. மீண்டுமவ்வறிவுதானா ஆத்துமமென்றுசர்ச்சிக்கப்புகில், நிழலைமண்ணைக்கொண்டு மூடஅன்னிழல் மண்ணிற்குள்மறைவுறாமல் அம்மண்ணிற்குமேலுகிப்பது போலவே எல்லாதத்துவங்களையும் சுற்றியறிந்து அவைகளுக்கும் விலக்ஷணமாய் ஓங்கிநிற்குமேயல்லாமல் தானாகிய ஆத்துமத்தின்லக்ஷணமின்னதென்று அவரவர்மனதிற்கொருவாறாய்த்தெளிவானபோதிலும்,வியக்தமாய் சொல்லமுடியாது அவ்வாறேநம்முடையஞானிகளிலொருவரும், நானென்றபோதத்தைநானனமுக்தியை நானெங்ஙனம் சொல்லுதுந்திபற நான்மறைக்கெட்டாதென்றுந்திபற" வென்றுசொல்லியிருக்கிறார் ஆதலால் அந்தசீவாத்துமாவிற்கும்அந்தரியாமியாகிய அவாங்மனசகோசரமான பரப்பிரம்மத்தின் சுவரூபம்இன்னதென்று சொல்லமுடியாததாய் வேதமும்" "యతోవాచో నివర్తంతే, అప్రాప్యమనసాసహ" என்றுகூறுகின்றதுமல்லாமல்" "சற்கண்டோதேனோசினிரசமோபாகோவென் சொற்கண்டாதேதெனநான் சொல்லுவேன்" என்று தாயுமானவரும் வெளியிட்டிருக்கிறார். வேதமும்முன்னோருமிப்படிஉபதேசித்திருக்க பிரமத்திற்கு ரூபங்கல்பிக்கும் அபிமதங்கள் மெய்யென்றெப்படி யெண்ணலாம். இதுநிற்க, ஆத்

தும வேதத்திற்கும் விகித வேதத்திற்கும் சம்மதமானதாகவும் நம்முடையமுன்னோர்கள் அனுஷ்டித்துவந்ததுமானமேலெடுத்துக்காட்டிய குற்றமற்ற சத்தியசமயமுற்றிலும் புதைபட்டு அபிப்பிராயபேதங்களை விருத்திசெய்து நமதுமனம் சத்தியத்தைக்கிரஹித்துபவித்திரமடையபாதையில்லாதபலசங்கேதங்கள் நமக்குளுண்டாவதற்குக் காரணமென்னவென்றுயோசிக்கில்நமதுவேதங்களுக்குள்பலவிடங்களிலும்குறித்திருந்த உண்மைக்கோட்பாடுகளை ஒன்றாய்த்திரட்டிஉலகத்தாருணர்ந்து உருவிலாபிரமவுபாசனமொன்றிலேயே உஜ்ஜீவிக்கவேணுமென்கிற உத்தேசியத்துடன், பராசரர் பெற்றபற்றிலாவியாசமஹர்ஷியினாலியற்றப்பட்ட பிரமசூத்திரம், யாவருமெளிதில்கிரஹிக்கத்தக்கவசனநடையிலிராமல்கடினபதங்களும், ஆழ்ந்தகருத்துமுள்ளதாயிருந்தபடியால், அதற்குபாஷியஞ்செய்ய எத்தனித்த நமதாசாரியர்கள், அந்தகன் ஆனையின் உருவை அறிந்து வெளியிடுவதுபோல், ஒருவர் நிரவயவநித்தியதேவனுக்கு உருவமுள்ளதென்றும், மற்றொருவரில்லை என்றும் உரைசெய்து தங்கள் அபிப்பிராயங்களுக்குத்தக்க நவீன அபிமதங்களுண்டாக்கி அவைகளை விருத்திசெய்து வந்ததேயாம். அதையனுஷ்டித்தநாமும் நமது சுவரூபம் கெட்டு நமதுநாட்டாருக்குள் பரஸ்பரமிருக்க வேண்டிய பிராதிருவாசல்லியத்தையுமிழந்து நாசத்தையடைந்திருக்கிறோம்.

ஆதலால் நாம்பிரகிருதத்தில் அனுஷ்டித்துவரும் மதங்களின் சங்கேதங்களை முற்றிலுமொழித்து நம்முடைய வேதத்தில் "எத்தேவனால் இந்தபூதங்களை சிருஷ்டியாய் யாவனால் ரக்ஷிக்கப்பட்டு மீண்டுமவைகள் யாரைப்போயடையுமென்று சொல்லியிருக்கின்றதோ அந்தசத்தியபிரமம் மொன்றையே" న చక్షుషా గృహ్యతే నాపి వాచా, నాన్యైర్దేవైస్తపసా కర్మణా వా, జ్ఞానప్రసాదేన, విశుద్ధసత్త్వస్తతస్తు తం పశ్యతే, నిష్కలం ధ్యాయమానః" அவர்கண்ணுக்காவது வாக்குக்காவது மற்ற இந்திரியங்களுக்காவது கிராஹியமாகிறதில்லை. தபசினாலே யாவது வேள்விமுதலிய கர்மங்களினாலாவது யாரும் அவரை அடையார்கள், ஞானப்பிரசாதத்தினால் அந்தக்கரணசுத்திசெய்தவன் மாத்திரம் தியானஸ்தனானபோதுவுருவிலாப் பிரம்மத்தை அறிகிறான். என்று சொல்லும் சுருதியின் கருத்தின்படி, தியானமரர்க்கத்தா லுபாசனைசெய்து நம்மவரெல்லோரும் பரஸ்பரநேசத்தோடு வாழவேணுமென்கிற எண்ணத்துடன் "సత్యమేవజయతే నానృతం" என்னும் துவசத்தை சிரோபூஷணமாகக் கொண்ட தத்துவபோதினிமூலமாய் சற்றும் சோர்வடையாமல் எத்திக்கிலும் மெஞ்ஞானப்பிரவசனம் செய்யும்சத்தியசந்தர்களாகிய வேதசமாஜத்தாருடைய முக்கியஉத்தேசியத்தை நாமனைவரும் அவலம்பிக்கில் வாஸ்தவமாகவே நமது சித்தம் சுத்தமடைந்து இஹத்திலும் பரத்திலும் சுகம் பெறலாமென்பதற்கையமில்லை.

ஆதலால், அவர்களுடைய வெண்ணத்தை நன்றாயறிந்து உள்ளுறக்கலக்கவும் அதற்கிசைய நமதுவாழ்க்கையை யொழுங்குடனடத்தவும் கருணாநிதியாகிய கடவுளனுக்கிரகிப்பாராக.

பட்டுக்கோட்டை } இங்ஙனம். ஊழியன்
மார்ச்சுமீ - ககவ } கண்டுகளித்தோன்-

வங்கதத்துவபோதினி.

மொழிபெயர்ப்பு.

கல்கத்தா பிராம்ஹஸமாஜத்தின்
ஙஎ - வது, வருஷோத்ஸவம்.

வங்கசகம். கஎஅஅ. மாவமீ ககவ
புதன்கிழமை.

(கலியுகாதி சககூஅஞூ) தைமீ கஉவ)

காலை.

ஸ்ரீயுக்தஆஜேந்திரநாதடாகரவர்கள். (ஸ்ரீமத், தேவேந்திரநாதடாகரவர்களுடையமுதற்புதல்வர்) ஸ்ரீயுக்த வேசுராம சட்டோபாத்தியாயர், ஸ்ரீயுக்த ஆநந்தசந்திரவேதாந்த வாகீசர், இவர்கள் சங்கப்பீடத்தின் பேரிலுட்கார்ந்து, வேதாத்தியயனஞ்செய்துஉபாசனை முடித்தஉடன், ஸ்ரீயுக்த வெசாராம சட்டோபாத்தியாயர் கடவுளை அன்புட

ன் அகிலவிதமாய் பிரார்த்தனைசெய்ய, ஸங்கீதத்தோடு ஸபைகலைந்தது.

மாலை.

ஸ்ரீயுக்தவேசூராமசட்டோபாத்தியாயர், ஸ்ரீயுக்த ஆநந்தசந்திரவேதாந்தவாகீசர், ஸ்ரீயுக்தஹேமசந்திரஹட்டாசாரியர் இம்மூவரும் (ஸமாஜத்தலைவராகிய **ஸ்ரீமது-தேவேந்திரநாததடாகரவர்கள்** மாக்ஷிமைதங்கியமாளிகையில் வேதிகையினிடமாய்வீற்றிருக்க, ஸ்ரீமது அயோத்தியாநாத பகடாசீயானவர் நின்றுசொன்னதாவது—

"பிரதிவருடத்திலும் இம்மாவமாதத்தின், கக-ந்தேதிவருகின்றது. பிரதிவருடத்திலும் இவ்வினியபெருந்திருவிழா நம்மையாகர்ஷிக்கின்றது. வருடாவருடம் நாமொன்றுசேர்ந்து இதின்ஆனந்தத்தைஅனுபவிக்கின்றனம். இம்மாவமாதத்தின் கக-ந்தேதி ஸாதாரணர்க்கு ஸகஜமாயிருக்கினும், அதில் கேவலம் பிராம்ஹஸமாஜத்தார் மாத்திரமே கரையிலாக் களிப்பையடைகின்றனர். இதென்னை? நமக்கும், பிராம்ஹஸமாஜத்திற்கும், இம்மாவமாதத்திய கக-வதுதினத்திற்குமுள்ள இனியபற்றுதலினால் நமக்கிந்த நாளினிடத்து விசேஷ அன்புண்டாயிருக்கிறது. மாவமாதத்திய கக-வது நாள் சூனியவஸ்துவு. ஆயினும் ஆனந்தவடிவனாகிய பரமேச்சுரன் பிராம்ஹஸமாஜத்தை நிரம்பச்செய்திருக்கிற ஆநந்தமானது விலக்ஷணமாய் இன்றேயளிக்கப்பட்டது.

இருள் நிறைந்த ஆகாசத்தில் இரவியுதித்தாற்போல அந்தகாரமடங்கிய இத்தேயத்தின்கண், பிராம்ஹஸமாஜமுண்டான அந்த முதல் மாவமாதத்திய கக-வதுநாள், என்ன சுபக்ஷணத்தில்உதயமாச்சுது? அத்தினம் நாமென்றும் மறக்காததாயிருக்குமெனயாரறிந்தார்? ஆயினும் அந்ததினம் மீண்டும்வரவில்லை. அந்தநாள்கடந்து ௩௭-(ஹூ) ஆயிற்று. இன்று ௩௮-வதுமாவமாதத்தியகக-வதுநாளானதால், பேரானந்தத்தில் மூழ்கியிருக்கின்றனம். இன்னம் சிலநிமிஷங்களுக்குப்பிறகுஇந்ததினம்முடிவுபெறும்.இவ்வொளி நின்றுபோகும். இந்தபுதிய இலைகளும் பூமாலைகளும் உலர்ந்து விழுந்துபோம். இத்திருவிழாவுக்காகவும்,இதைப்பார்க்கவும்வந்து இவ்விடத்தையலங்கரித்துக் கொண்டிருக்கிறவர்களும் அவரவர் வழியேசெல்லுவர்.

ஆதலின அவ்வானந்தஸ்வரூபனுடைய ஆனந்தத்தை இன்றெவ்வளவடையக்கூடியதாயிருக்கிறதோ அவ்வளவினின்றும் இவ்வுற்சவமுடிவோடு வஞ்சிக்கப்படுவோமென அஞ்சுகின்றேன்! இன்று நமதுள்ளமாகிய கண்ணாடியின் கண்ணே பிரதிபலிக்கிற அவருடைய அருளொளியும், தீபஒளியுடன் மறைந்துபோகுமோ! இப்போது பிரகாசிக்கிற இந்திரியங்களைக்கடந்த அத்திரு உருவானது இனிவிளங்காதோ! ஆசை இச்சை, அன்பு பத்தி, விருப்பம் உவகை, இவை இன்று பயன்பட்டவாறு இனிபயன்படாதோ!

ஆ! சித்தசஞ்சலத்தைக்கருதின், உதிரமெல்லாமுலர்ந்துபோகின்றது. இன்று உள்ளத்தை எறித்துக்கொண்டெழும்புகிற அனுதாபத்தீயானது, நாளைவிசேஷ விருப்புடன்தனுட் புகும். ஒருமிக்க நாவிகளாய் எல்லாவற்றையுந் துறந்து உயிருக்குயிரான ஈச்சுரனைதேடுகிறவர்கள், மறுபடியும் நித்தியவாழ்வுக்குபயோகமான தருமமாகிய இரத்தினத்தை வெகுதூரத்திற்புதைத்துவிட்டு பாபமயமாகிய தடாகத்தில்மூழ்கிப்போகிறார்கள். தூரதிருஷ்டியில்லாத மோஹ மயமாகிய ஆன்மா, மண்ணுலகிலுள்ள மலினவஸ்துக்களைவிரும்பி மேல்நாட்டத்தைவிடுத்து, முடிவையோசியாது, அமிருதமெனவிஷத்தையருந்துகின்றது.

இத்தீயநிலையிலிருக்கிற ஆன்மாவை உய்யச்செய்யு நிமித்தம்பிராம்ஹதருமமுண்டாயிருக்கிறது. மேலும்அவ்வப்போதுஇம்மஹோத்ஸவத்தைத்தருவித்துஅதற்குநூதனஉயிர்ப்பைத்தருகின்றது. இவ்வுற்சவம்கேவலம் உற்சவநிமித்தமன்று. விடயவாஞ்சையிலமிழ்ந்தியிருக்கிற உள்ளததை எழுப்பும்நிமித்தம். ஓ நன்மையே வடிவாகக்கொண்டிருக்கிற பரமேச்சுரனே! இன்றயநிலையில் எமதுமனமென்றுமிருக்கயருள்வாயென உம்மிடத்து பிரார்திக்கின்றனம்".

பிறகு ஸ்ரீயுத்தவேசூராம சட்டோபாத்தியாயர் அடியில்வருமாறுநினைப்பூட்டினார்.

"யார் எல்லாவற்றிற்கும் தலைவராயும் அனைத்திற்கு அன்னையாயுமிருக்கிறாரோ, அவரோநமக்குமோக்ஷமருள்பவர்; அவரோ நாமுபாஸிக்கவேண்டியதேவன். யாரால், சந்திரன், சூரியன், மலை, ஆறு, கடல்இவைகளனைத்துமுண்டாயிற்றோ அவராலேயே நாமனைவரும் படைக்கப்பட்டுஉயிர்வாழ்ந்திருக்கிறோம். யாருடைய புகழைமண்ணுலகமும்விண்ணுலகமும் ஓலமிடுகின்றதோ, இவ்விளக்குகளின் ஒளியாருடையவருளை விளங்கச்செய்கின்றதோ, இந்தவிசித்திரமாகியபூமாலைகளனைத்தும் யாருடைய அமிருதமாகிய மணத்தையும், கைக்குறிகளையும் பிரகாசிக்கச்செய்கின்றனவோ; அத்தேவதேவனை இன்று பூஜிக்கிறதற்காக நாமனைவரும் ஒருமனதுடன் இந்தபவித்திர ஸமாஜோற்சவத்தில் ஒன்றுசேர்ந்திருக்கிறோம்.

ஒன்றுமிராதபோது யார் இவ்வனைத்தையும் படைத்து, ஜடமாகிய உடலுடன் அசரீரியும் ஞானஸ்வரூபியுமாகிய உயிரை அமைத்து, தனதளவற்ற ஞானவிஞ்ஞானங்களையும் சிற்பவல்லமையையும் விளங்கச்செய்தாரோ, யார் உடலுக்காக அந்நபாநாதிகளையும், உயிரைப்பற்றி ஞானதருமங்களையும் பகர்ந்துதந்துதன தனைக்கடந்தஅருளை அறியச்செய்திருக்கிறாரோ; யார் உலகத்திற்கு ஒளியாகிய பிராம்மதருமத்தையனுப்பி,பாரதவருடதின் கண்ணே யுள்ள இந்தவங்கதேசத்தின் மோகவிருளையகற்றி, பூலோகத்தை விருத்தி யடையச் செய்தாரோ, "அவ்வேகதேவனும திரிபுவன பரிபாலகனுமான பரமேச்சுரனுடைய "ஸந்நிதானத்திற்குநன்றியாகியகாணிக்கையுடன் நாமனைவரும் இன்றுவந்திருக்கிறோம். மனக்கண்ணைத்திறந்து அந்த விஞ்ஞானவகஸ்வரூபியும், ஒளிக்குஒளியானவரை இவ்விடத்திற்பிரத்தியக்ஷமாய்ப் பாருங்கள். அத்திரிபுவநராஜனை உள்ளும்புறமும்எவ்விடத்தும் வெளியறங்கமாய்க்கண்டு எல்லோரும் உற்சாகம்நிரம்பிய உள்ளத்துடன் அவரது பவித்திரசரணங்களில் அன்பாகியமலரை அர்ப்பணைசெய்யுங்கள். பத்திரூபமாய் அவருடையபாதங்களில்விழுந்துஎல்லோருமவரையு முபாசிக்கப்புகுமின. கைகுவித்தவரதுபுகழைப்பாடநாவை எழுப்புங்கள்."

பிற்பாடு வேதாத்திய யனத்தோடு உபாஸனைமுடிந்த உடன் ஸ்ரீயுக்த, ஆநந்தசந்திர வேதாந்தவாகீசர் பிராம்மதருமத்திலுள்ள சிலசுலோகங்களை பொழிப்புரை விசேடஉரைகளுடன் வாசித்தார். அப்புறம்முறையே ஸ்ரீயுக்த ஹேமசந்திர ஹட்டாசாரியரும் ஸ்ரீயுக்தவேவஹாராம் ஹட்டோ பாத்தியாயரும், சொன்னயம் பொருணயங்களடங்கி மிகநீட்சியான இரண்டு பிரசங்கங்களைச்செய்தனர். பின்னர் நான்கு பரப்ருஹ்மகீதங்கள்பாட சபைகலந்தது.

☞ அவ்விரண்டு உபந்நியாசங்களையும் மொழிபெயர்த்து, கூடுமானல் வருகிறபத்திரிகையில் வெளியிடுகிறோம்.

தஞ்சைநகர்தர்மசபை.

விஜயதெ ஸத்யமிதிநஷா.

அட்சயவருஷ தைமீ உஉ நாயிற்றுக்கிழமை சங்கரசாஸ்திரி பிரசித்தம் செய்யும்படி தெரிவித்துக்கொண்டதாவது.

நான் சென்றநாயிற்றுக்கிழமையில் செய்த சர்ச்சையானது வேதசமாஜத்தாருடைய முதலாவது விண்ணப்ப புஸதகத்தை பூர்வபட்சம்செய்வதா யிருப்பதால் அப்படிப்பட்ட சர்ச்சை வெதசமாஜத்தாரிடத்தில் நான் நேரே செய்யாமல் இந்த சபையில் ஏன் செய்யவேணுமென்று சிலர் ஆட்சேபிக்கலாம். அந்த வேதசமாஜத்தாருடைய சட்சியானது ஸ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸாதிகளின் பேரில் பொறுத்ததாக இருக்கிறது. நான்பூர்வபட்சம்செய்வது மேல்கண்ட சுருதிமுதலானதுகளின்பேரில் பொறுத்ததாகத்தான் இருக்கிறது. இந்தசபையில்பிரசங்கத்துக்காக கூடும் ஒவ்வொருநாயற்றுக்கிழமையிலும் சகலசாஸ்திரங்களையும்தெரிந்த அநேகம்பண்டிதர்கள்கூடுவதினால் அவர்களுக்குமுன்பாகநான்செய்யும்சர்ச்சையைஅவர்கள் ஒப்புக்கொண்டால்அதை வேதசமாஜத்தார் யாதொருதடையுமன்னியில்ஒப்புக்கொள்ளுவார்கள் என்கிறதைரியம்எனக்குண்டாகும் பொருட்டு இந்தசபையில்சர்ச்சிக்கத்தொடங்கினேன். வாதஂஜயஸேஹாஹாஷ்யஂ முதலாவதுஅத்தியாயம்பஸ்பசையில் ஸாஂமாஸாஹஸ்யாஸ்கூாரொவெதாஃஸஹஸ்ரஂஸாமஸாவா வணகுஸதரூமயவஃஸாவா வணகவிஂஸதிவஹ்ருசாதாஂநவ கயுவஃணஸவாகொ வாக்யஂ ஐதிஹாஸவுராணாநிவத்ருகஃ கிஂஜாநாதி – அங்கத்தோடும் ரகஸியத்தோடும் கூடியவேதம் – ச. அதில்சாமவேதம் ஆயிரம் கிளையுள்ளது. யஜுர்வேதம்-க௦௧ கிளை ருக்குவேதம்-உக-கிளை அதர்வணவேதம், க-கிளை. இதுதவிர வாகமென்றும் வாக்கியமென்றும் இதிஹாஸபுராணங்களென்றும் இவைகளில்யார் எதை அறிவான்என்றும் சொல்லியிருக்கிறது. இப்படிக்கிருக்க விண்ணப்பம்-உ௰௦-வது பக்கத்தில்ருக் யஜுஸ் ஸாம அதர்வணவேதங்களில் அவற்றைச்சேர்ந்தபிராம்மணங்களும் தசோபநிஷத்துகளும் வேதமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தஒப்புக்கொள்ளுதலினால், மேல்கண்ட சாகைகளுள் பட ஒப்புக்கொண்டதாகச் சொல்ல இடமிருந்தபோதிலும். வேதங்களிலுள்ள சிலவற்றிற்கு மாத்திரம் பதம் கிரம இதுகளுக்கு ஏற்பாடுபண்ணின ராவணனுடைய கண்ணில் சதோபநிஷத்து படாததினால் அவைகள் கல்பனையென்றும், சுசு-வதுபக்கத்தில் சுநஹாவெவெதாஃ என்றதுமகிமாவிஷயமாய்ச் சொல்லப் பட்டதென்றும் புராண சூத்ரங்கள் கல்பனை யென்றும் கூசுசு - வது பக்கத்தில் ஆகமத்தைப் ப

மரர் சீவனோபாயமாகசெய்தார்கள் என்றும் எப்படி வேதசமாஜத்தார் நிராதாரமாய்ச்சொல்லக்கூடும்! இதுதவிரயஜுர்வேதத்தில் ஆரணம் உ-வது. பிரசனத்தில்வ்ருஹயஜுகண்டத்திலும், காடகம்-உ-வது பிரசினத்திலும். ௩௯ - புராணங்களும் இதிஹாஸங்களும். உ௮ - ஆகமங்களும் உபாகமம் கல்பம் முதலானதுகளும் அநாதியென்று ஏற்படுகிறது. ௧௭ - வது. பக்கத்திலுள்ள சங்கரவிஜயமென்னும் கிரந்தத்தில் [illegible] என்றவசனத்தினால் ஸ்மிருதி புராணங்கள் ஒப்பந்தம் சுருதிக்கு விரோதமல்லாதவனாயில் இதிஹாஸ ஆகமங்களையும்வேதசமாஜத்தார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். என்பதுநிர்விவாதமாயிருக்கிறது. ௧௩௯-வது பக்கத்தில். [illegible] என்றஆபஸ்தம்பஸ்மிருதி வசனத்தால் மனுஸ்மிருதியானதுவேதார்த்தங்களைதிரட்டிசெய்யப்பட்டிருக்கிறதென்றும் அந்தமனுஸ்மிருதிக்குவிரோதமானஸ்மிருதிகள் பிரமாணமாக மாட்டாதுகளென்றும் பூஜாவிஷயத்தில் உள்ளபாரா சரஸ்மிருதிவாக்கியங்கள் மனுஸ்மிருதிக்கு விரோதமாயிருக்கிறதென்றும் அதுகள் அப்பிரமாணமென்றும் ஒருவர் ஆட்சேபித்தால் அப்பேர்பட்டசங்கதிகளுக்குமனுஸ்மிருதியிலிருக்கிற ஆதாரங்களை பிந்தியவாரங்களில் நான் எடுத்து உரைப்பதினால் பூர்த்தி யாகுவதுமல்லாமல் சுருதிஸ்மிருதி புராணஇதிஹாஸ [illegible] ங்களுடைய விஷயங்களின் பிரமாணங்களும் விஸ்தாரமாய்த்தெரியும். மேலும் மேற்கண்டவசனப்படி மனுஸ்மிருதியானதுவேதார்த்தத்தையே சொல்லிஇருக்கிறதென்று ஒப்புக்கொண்ட வேதசமாஜத்தார் ஒருவேளையாராவது அதில் அர்ச்சைக்கு ஆதாரமிருக்கிறதென்று எடுத்துக்காட்டினால் என்னபண்ணுசிறதென்று பயந்தோ அல்லது என்னகாரணத்தைப் பற்றியோ. ௧௩௭ - வது பக்கத்தில் [illegible] என்றமீமாம்சா சாஸ்திரத்திலுள்ள ஜயிமுனிவசனத்தின் அர்த்தமாகியசுருதிக்கு விரோதமாய் ஸ்மிருதி யிருக்கிறபோது ஸ்மிருதியை அப்பிரமாணமென்ற சாமான்ய வசநத்தைக்கொண்டுவேதார்த்தத்தையேதிரட்டி செய்திருக்கிறதினால் வேதத்துக்கு விரோதமல்லாத மனுஸ்மிருதியைக்கூட அப்பிரமணம்என்று சொல்லத்துணிந்தார்கள் ௧௪௦-வது பக்கத்திலுள்ள, [illegible] என்றகுல்லூகபட்டீயவசனத்தால் மனுவானவர் வேதார்த்தங்களை செவ்வையாய் தெரிந்து ஸ்மிருதிசெய்திருக்கிறாரென்று ஏற்படுகையில் அதைக்காட்டிலும் வேதசமாஜத்தார் சின்னப்பபுஸ்தக மூலமாய் வேதத்துக்கு இப்போது விசேஷ அர்த்தம்செய்யலாமா? ௧௩௮ - வது பக்கத்தில் [illegible] ஷா" என்ற சங்கரவிஜயமென்னும் கிரந்தத்திலுள்ள [illegible] மானது யாதொரு வைதிக கர்ம்மமும் இல்லாமலும் வர்ணாசிரம தர்மமில்லாமலும் இந்திரிய சம்யமனாதிகளில்லாமலும் வாயினால்மாத்திரம் பிரம்மம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற வேதசமாஜத்தவர்களிடத்தில் அனுபவிக்கிறது என்பது [illegible] தமாயிருக்கிறது ௧௭௪ - வது பக்கத்திலுள்ள; [illegible] " என்று வித்தியாரணியருடையசர்வசங்கிரகமென்னும் கிரந்தத்தின் பிரசஸ்பதிவசனமென்கிறசுலோகங்களால் ஜபாக்கிரியை வேண்டியதில்லையென்றுஅர்தமாகிறது. வேதத்துக்குபாஷியம்செய்த மேகவலம்மனுஷீய ஞம்வித்யாரணியர் பிரகஸ்பதியினால் செய்யப்பட்டதென்னகிரந்தமென்றுசொல்லாமல்பிரகஸ்பதிவசனமென்றமேல்கண்டசுலோகங்களால்முப்பத்தாறுஸ்மிருதிகளிலும்சொல்லிய கர்ம்மபாகத்தை நிஷேதிக்க எப்படி அதிகாரம் பெற்றாரென்பதை வித்துவான்கள் யோசிக்கவேண்டும். அப்படியிருந்தால், ௧௩௮- வது பக்கத்தில் சொல்லிய பிருகஸ்

பதி ஸ்மிருதியில் ஶ்ராத்தாதி கருமபாகங்களை எப்படிசொல்லியிருக்கக்கூடும். யஜுர் வேதத்தில் அபர பிரசனம், க- இரண்டாவது மந்திரம் உத்திரகண்டம், க - இதுகளுக்கும் ஆரணம் மூன்றும்பிரசனத்துக்கும் என்ன விநியோகமென்பதைத் தெரிந்தவர்கள் மேல்கண்ட உதாஹரணத்தை உதஹரிக்கமாட்டார்கள். அகூ-வது பக்கத்தில் உள்ளபடி ஸம்வரிதாநி, என்றபதத்துக்கு ஆநோயாந்யவிஸம்ஊாநி என்றுசங்கராசாரியரும், கூ0 வது பக்கத்தில் சொல்லியபடி அந்தசப்தத்துக்கு ஶ்ருதிஸ்மிருதி விரோயஸ்ரூநு தயா என்று ரங்கராமானுஜஜீயரும்செய்திருக்கிற பாஷியங்களினாலும் ஷ-பக்கத்திலுள்ள, யஸ்மிநுதெமெயதா வாா: வாாவயந்க்ரோம தஃ, ஶ்ருதிஸ்ருத்யவிரொயெநவஸதா வாஸா உச்யதெ, என்றபோதாயனருடைய வசனத்தினாலும்; ஸ்ருத்யூநாநஸ்தாநம் அவசியமென்று ஏற்படுகிறது. எகூ - வது. பக்கத்திலுள்ள, நவிஸ்யதி கவளயொரொநவிஸ்யதிகவளதவஃ என்ற காசிகாண்டவசனமானது வேதசமாஜத்தாரின்கட்சியை அடியோடு பாதிக்கிறது.

சென்றவாரத்தில் தெவதாநாஂவஊஜநஂ என்றவாக்கியத்தினால் அர்ச்சை ஸ்தாபிக்கப்படுகிறதென்று வாதித்திருக்கிறரேன் அல்லவா? சம்ஸ்கிருத பாஷை தெரியாதவர்கள் வூஜா என்றசப்ததுக்கு அர்ச்சையென்றுஅர்த்தமல்லவென்று சொன்னபோதிலும் வாராஹஸ்ருதியின், உ-வது அத்தியாயத்தில் ஜப்யஂ தெவாவநஂ ஹொமஂஸ்வாயாயமெவ வஹெதெஸக, வைதிதிக்ரது விவநு ஹொஜயெச ஸாதகாநு விஜஃ, என்றவசனத்திலுள்ள தெவாவநஂ என்னும் சப்தத்துக்கும் ஶாநவிகாவநெ யென்று அர்த்தம்செய்வார்களாகில் ஶ்ருத்யாதிகளிலுள்ள ஹொஜநாதி சப்தங்களும்ஶாநவிகஹொஜநாதிகளென்று பொருள் செய்யவேண்டிவருவதுமல்லாமல் யோகாமிருதபானத்தினால்மாத்திரம் ஆகாரவிஷயத்திலும் முதலாவது மந்திரபிரசனம்-கஉ-வது கண்டத்தில்சொல்லிய நிஷேதத்தையும்மானசிகமாகமாத்திரமும் திருப்தி அடையவேண்டிவரும். இன்னமும் அர்ச்சாவிஷயத்தில் சமுசயம் தீராதவர்கள் விண்ணப்பம், ௲௲௦ - வது. பக்கத்தில் கண்டபடி வாராஹஸ்ருதியை ஆதாரமாகக்கோண்டு ஶாயவாவாயஶர் செய்திருக்கிறமாத வீயம் என்னும்கிரந்தத்திலுள்ள தெவதாவநப்ரகாணத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டியது. பிராம்மணனுக்கு யாதொன்றும் கொடுக்கக் கூடாதென்றும்சொல்லுகிறவர்கள் அவர்களுக்குக்கொடுக்காவிட்டால் கெடுதலுண்டென்று ஷ பாராசர ஸ்மிருதி உ - வது. அத்தியாத்தில் விதிக்கிற யொநதத்யாஸ விஜாதிஹ்யா ஙாஸிஜஓஸஂ வாமதஃ, வஸொாஸவ வாவிஷ்ட: ப்ரஹ்ம வநஂதஂவிநிஜிமெஸ, ஙாஜெதகவாதஊஷஹா ஙஂ தெவாநாநெஜ கவிஂஸகஂ, விப்ராணாஂ திறஂஸகஂஹாஙஂ, ஸவவாவெஃ ப்ரஶ வ்யதே; என்றவசனக்துக்கு என்ன அர்த்தம் செய்யக்கூடும் ஒருவேளை விஜாதிஹ்ய என்னும்சப்தத்துக்துக்கு ப்ரஹ்ம க்ஷத்ரிய வெஸ்யரொன்று அர்த்தம்செய்தபோதிலும். ப்ரதிஙஹஂ என்பது. ஸாவிரிகர்யவஸஂவிஹாதரமவாரிஶுஹாயிமஶேஷா ப்ராஹ்மணஸ்ய கயிகஂ வூஸ்வஂ || க்ஷத்ரியஸ்ய விஜிதஂ நிவஷ்டஂ வெஸ்யஸ்ரூத்ரயொஃ என்ற கௌதமசூத்திரத்தினால் பிராம்மணனுக்கு சொந்தமானபாத்தியமுள்ளதென்றும் மற்றவர்ணத்தாருக்கு அதில் எவ்வளவேனும் பாத்தியமில்லையென்றும் தெளிவாயிருக்கிறதல்லவா? மேலும் பிராம்மணே தரவர்ணத்தார் தானலப்தமென்று விவகரித்தால் ஹிந்துலாக்கள்சம்மதிக்குமா! ஆனதால் பிராம்மணனுக்குக்கொடுக்கவேண்டும் இதுதவிற ஷஸ்மிருதிரொண்டாவது அத்தியாயதில், வெஸ்யஸ்ரூத்ரஸயதாவஶதெ ஸூத்ராஃ விஜஸ்ஶுஷ்ரூஷ வஜ்ரதாஃ, என்றவசனத்தினால் சூத்திதின் பயிர்ச்செயல்வியாபாரம்உழவுதொழில் இதுகளைச்செய்யவேண்டுமென்று, விதித்திருக்கையில் வேதசமாஜத்தில் சேர்ந்திருக்கிற பிராம்மணேதரவர்ணத்தார் ஷசமாஜத்தில்சேரவாவது ஶ்ருதிஸ்மிருதியென்றுபேசவாவது எப்படிகூடும். ஸஂஶொஜஃ வஸஷ என்கிறவ்யாகரண சூத்திரத்திலும் அதை அனுசரித்

த பசூநாம் ஸமஜோ ந்யேஷாம் ஸமாஜோத ஸதர்மிணாம் என்கிற அமரகோசத்திஞலும் வெவ்வேறுதர்மங்களுக்கு கட்டுபடகூடாதத்துக்காக உபயோகித்திருக்கிற ஸமாஜ சப்தத்திலுள்ள தீவர்வாதம் ஸ்பஷ்டமாக இருக்கிறது. வேதஸமாஜத்தார் மேல்கண்டஸ்மிருதி வாக்கியங்களை யுக்திவாதங்களால் ஆட்சேபிக்கிறதாயிருந்தால் ௧௩௪ - வதுபக்கத்தில் கண்ட ஶ்ருதிஸ்ம்ருத்யுதிதம் தர்மமநுதிஷ்டந்ஹி மாநவ:, இஹ கீர்த்திமவாப்நோதி ப்ரேத்ய சாநுத்தமம் ஸுகம், ஶ்ருதிஸ்து வேதோ விஜ்ஞேய: தர்மஶாஸ்த்ரம் து வை ஸ்ம்ருதி:, தே ஸர்வார்த்தேஷ்வமீமாம்ஸ்யே தாப்யாம் தர்மோ ஹி நிர்பபௌ, யோவமந்யேத தே மூலே ஹேதுஶாஸ்த்ராஶ்ரயாத் த்விஜ:, ஸ ஸாதுபிர்பஹிஷ்கார்யோ நாஸ்திகோ வேதநிந்தக:, என்றமனுஸ்மிருதியின் ௩ - வது. அத்தியாய வசனத்தை யோசித்துகொண்டுஆட்சேபிக்கத்தொடங்க வேண்டிவரும். மேல்கண்டஸ்மிருதியென்று ஏகவசனத்துக்கு மனுஸ்மிருதியென்றுமாத்திரம் அர்த்தம்செய்தால்ஶ்ருதியேகவசனத்துக்கும். ௪ - வேதங்களில் ஓன்று என்று அர்த்தம் செய்யவேண்டிவரும். மற்றவைகளை அடுத்த நாயிற்றுக்கிறமையில் சர்ச்சிக்கிறேன்.

௧௮௯௭ ஸ்ரீ ஜனவரிமீ ௧௭௳ தஞ்சாவூர் தர்மசபை.	குமாரகிஷ்ண சாஸ்திரி காரியதரிசி.

இதிஹாஸகல்பனை.

தொடர்ச்சி.

பு-௩, இ-௧0, ப-௧௮௯.

இனிஇலங்கைத்தீவின் உண்மையானசதுரஅளவிட்டு இலங்கை எழுநூற்றுக் காதமென்று சிலர்சொல்லுகிறபடி வைத்துகொண்டால் அதில்நிறுத்தக்கூடியகுரங்குகளின்தொகையைப்பார்ப்போமாக. எப்படியெனில்இலங்கைத்தீவின்சுற்றளவு -௭00-காதம் அல்லது - ௧௭௫0-மயில்ஆகையால்-௫௫௭-அதின்குறுக்களவுமயில் ஆகும்.வட்டத்தரைவிட்டத்தரையாற்ருக் கச்சட்டைதைத்தோன்றுங்குழியாகையால் ௧௭௫0-ல்அரைவாசியையும் ௫௫௭-ல்அரைவாசியையும்பெருக்கி இலங்கைத்தீவுமுழுதும் ௨௪௩௬௮௭½சதுரமயிலை அடக்குமென்றறியலாம்.இதைச்சதுர அடிஆக்கிஞல் ௬௭௯௩௬கோடியே. ௭௬00 00-தமிழளவையின்படிஇலங்கைத்தீவில்இருக்கக்கூடியகுரங்குகள்இவ்வளவேஅவ்வெழுபது வெள்ளக்குரங்கும் படைப்படையாய அடுக்கப்பட்டனவென்று நினைத்துக்கொண்டு எத்தனைபடையாகுமென்ருல் - ௧0௩-தாமரையே-௩௭௮௮௬௯-மகாசமுத்திரமே-௧௮௭௫௮௧௭-சமுத்திரமே-௯0௪௪0௮- மகாபதுமமே-௮௬௭௫௨௨௯-பதுமமே - ௫௨௭௧௯௬௨-மகாவிந்தமே - ௩௧௪௪ ௫௭0விந்தமே-௧௫0௬௬௬௧- மகாசங்கே ௯௨௭௪௮௨௩-மகாகோடியே- ௨௬௮௨௨கோடியே ௪௬௭௬௨௩௮-ப்படையாம் இது ௧௬௫௧௪-மகாசமுத்திரமே ௭௫௧௨௫௩௫ - சமுத்திரமே௧௯௩௨௯௪௧-சங்கே ௨௪௯௭௫௨௬௮௩௮௮-மகாபதுமமே௩௪௧0௩௭0-பதுமமே - ௩௬௪௧௯௫௬-மகாவிந்தமே-௯௭௭௭௧௨விந்தமே-௧௮௩௭௪0-மகாசங்கே- ௬௫௬௪௬௧௯-சங்கே௯௪௨0௬௯௯-மகாகோடியே-௭௬௯௩௭௯௭-கோடியே ௭௬௯௯௮௫௫-மயில் அல்லது ௧௯௫௧மகாசமுத்திரமே ௪௭௫௧௨௫௩-சமுத்திரமே-௫௫௨௬௮௩௮ மகாபதுமமே ௮௩௪௧0௩௭-பதுமமே ௩௬௪௧௯௫-மகாவிந்தமே ௬0௯௭௭௭௧விந்தமே - ௨0௧௮௩௭௪ - மகாசங்கே-௬௫௬௪௬௧ - சங்கே௧௯௪௨௬௯ - மகாகோடியே ௯௭௯௯௩௭௯கோடியே-௭௭௬௯௯௮௫-யோசனை உயரமும் மகாமேரு மலையைப்பார்க்க - ௪0௬௫௫௭௩-சமுத்திரமே-௧௭௭௮௨௩௪ - மகாபதுமமே-௭௫௬0௯0௪-பதுமமே ௩௯௧0௪௯௨மகாவிந்தமே?௫௪0௭௫௨0-விந்தமே- ௩௬௯000௩-மகாசங்கே-௮௨௭௯௩0௩0௩-சங்கே - ௪௨௯௫௮௨௧ - மகாகோடியே௨௬௪௫௪௮௫-கோடியே-௨௮௭௪௯௫௩-தரம்உயரமாயிருக்கும். இப்போது சதுரஅளவிலே ௧௯கோடியே ௯௨௫௯௨௮0 சதுரமயில் அல்லது ௫௫-மாகோடியே-௫௫0௨௯௯௧-கோடியே-௧௫௫௨000-சதுரஅடியுள்ளஇப்பூமிமுழுவதிலும்அக்குரங்குகளைநிறுத்திஞல் சதுர அடிகள் எவ்வளவோ அவ்வளவு குரங்குகளே நிறுத்தப்படலாம். இதற்கும் எழுபதுவெள்ளத்துக்கும் உள்ளவித்தியாசம்மிகவும் வெளியாயிருக்கின்றது,

(தொடர்ந்துவரும்.)

ஓம்பிரமணேநம:

தத்துவ பூரணம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

சீராருந்தத்துவத்தைச் செந்தமிழாலன்புறவே,
பேராரும்பூரணமுன் பேசுதற்குக் - காராரும்,
மூலத்தின்மேனின்று மூவண்டந்தாண்டியிரு,
சீலத்தின்மேனின்ற சீர்.

இ-ம். சங்கராபரணம் - ஆதிதாளம்.

௧. அழியாதநாயன், அகத்திலிருக்க,
இழிவாகவூரெங்குமே - பூரணம்.
ஏகிமெலிவதேனோ?

௨. அறத்துளரிய, அறமதுகாயம்,
திறத்துடனொப்புவித்தால் - பூரணம்.
தேறுவோர் கொள்கையடி.

௩. செல்வத்துள் செல்வம், சிறிதுங்கெடாத,
அல்லலழி முத்தியதே, - பூரணம்.
ஆராய்ந்துகண்டறியே.

௪. இன்பத்துள்ளின்பம், இணையறுவின்பம்,
அன்புறுபேரின்பமே, - பூரணம்.
ஆசையாய்க் கண்டறியே.

௫. ஒப்பற்றமேலோர், ஊடாடிகண்டு,
துப்பற்றே யுய்யுமிடம், - பூரணம்.
சொல்வதெளிதல்லவே.

௬. ஞானமுணர்ந்தால், ஞாலத்திற்றுனே,
மோனத்தைச்சாதித்தாலோ, - பூரணம்.
மூபுவியோர் மேலாவோமே.

௭. யானென் செருக்கை, மானென்றறுத்தோர்,
வானுறுமப்புவிக்குப், - பூரணம்.
வரர்புகழ்வெய்கு வோமே.